பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**16 03 2026** **7 15**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கேரளா, அசாம் மாநிலங்களிலும் புதுச்சேரி யூனியன்பிரதேசத்திலும் சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் இன்று தொடங்குகிறது.

2. மேற்குவங்க மாநிலத்தில் மூத்த அதிகாரிகளை இடமாற்றம் செய்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

3. தெலங்கானா சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று ஐதராபாத்தில் தொடங்குகிறது.

4. உலகளவில் கச்சா எண்ணை விலையைக் குறைக்க உதவும் வகையில், அவசரகால இருப்பிலிருந்து பெருமளவிலான கச்சா எண்ணெய் வெளியிடப்படும் என்று சர்வதேச எரிசக்தி முகமை தெரிவித்துள்ளது.

5. ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் மும்பை அணிக்கு எதிரான ஆட்டத்தில் காசி அணி **2-1** என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

கேரளா, அசாம் மாநில மற்றும் புதுச்சேரி யூனியன்பிரதேச சட்டப்பேரவை தேர்தலுக்கான அட்டவணை வெளியிடப்பட்டதை தொடர்ந்து, அங்கு வேட்புமனுத் தாக்கல் இன்று தொடங்குகிறது.

இன்று முதல் மார்ச் 23ஆம் தேதி வரை வேட்பாளர்கள் தங்கள் மனுக்களைத் தாக்கல் செய்யலாம் என்று அம்மாநிலங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புதுச்சேரியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய தலைமை தேர்தல் அதிகாரி திரு. ஜவஹர், வேட்பாளர்கள் ஆன்லைனிலும் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யலாம், ஆனால் அதன் அச்சிடப்பட்ட நகலைத் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் நேரில் சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறினார்.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை மார்ச் 24 அன்று நடைபெறும் என்றும், மனுக்களைத் திரும்பப் பெற மார்ச் 26 கடைசி நாள் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

மேற்குவங்க மாநில சட்டமன்றத் தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அம்மாநில அரசின் மூத்த அதிகாரிகளை இடமாற்றம் செய்து இந்தியத் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக ஆணையம் அனுப்பியுள்ள கடிதத்தில், சட்டமன்றப் பொதுத்தேர்தலுக்கான தேர்தல் தயார்நிலை குறித்து ஆய்வு செய்த பின்னர் இந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

அதன்படி,மாநில அரசின் தலைமைச் செயலாளர் திருமதி. நந்தினி சக்ரவர்த்தி மாற்றப்பட்டு திரு. துஷ்யந்த் நாரியாலா அப்பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்குவங்க அரசின் உள்துறை முதன்மைச் செயலாளராக திருமதி. சங்கமித்ரா கோஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல் ஆணையத்தின் செயலாளர் திரு. சுஜித் குமார் மிஸ்ரா, ஆணையத்தின் இந்த உத்தரவுகளை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் என்றும், மேற்கண்ட அதிகாரிகள் பணியில் சேர்ந்தது குறித்த அறிக்கையை இன்று மாலை 3 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், இடமாற்றம் செய்யப்பட்ட அதிகாரிகள் தேர்தல் முடியும் வரை தேர்தல் தொடர்பான எந்தப் பணிகளிலும் ஈடுபடுத்தப்படக் கூடாது என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஆறு மாநிலங்களில் காலியாக உள்ள எட்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலையும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

கோவாவில் போண்டா, குஜராத்தில் உம்ரேத், கர்நாடகாவில் பாகல்கோட் மற்றும் தாவணகெரே தெற்கு, மகாராஷ்டிராவில் ராகுரி மற்றும் பாராமதி, நாகாலாந்தில் கோரிடாங் மற்றும் திரிபுராவில் தர்மநகர் ஆகிய தொகுதிகளுக்கு இந்த இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் இந்த தகவலை தெரிவித்த தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ் குமார், கோவா, கர்நாடகா, நாகாலாந்து மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்களில் **வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கும் என்றும், வாக்குப்பதிவு அடுத்த மாதம் 9-ஆம் தேதி நடைபெறும் என்றும் தெரிவித்தார்.**

**குஜராத் மற்றும் மகாராஷ்டிராவில் இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இம்மாதம் 30-ஆம் தேதி தொடங்கும் என்றும், அடுத்த மாதம் 23ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும் என்றும் அவர கூறினார்.**

**இந்த 5 தொகுதிகளின் வாக்கு எண்ணிக்கை மே 4-ஆம் தேதி நடைபெறும் என்றும் அவர் கூறினார்.**

கடந்த ஜனவரி மாதம் 28-ஆம் தேதி விமான விபத்தில் துணை முதல்வர் திரு. அஜித் பவார் காலமானதைத் தொடர்ந்து பாராமதி சட்டமன்றத் தொகுதி காலியானது.

அகில்யாநகர் மாவட்டத்தில் உள்ள ராகுரி சட்டமன்றத் தொகுதி, பிஜேபி சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவாஜிராவ் கர்திலே காலமானதைத் தொடர்ந்து காலியானதால் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மக்களவையில் இன்று 2026-27ஆம் ஆண்டிற்கான ரயில்வே மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெறவுள்ளது.

இது தவிர, 2026-27ஆம் ஆண்டிற்கான வேளாண் மானியக் கோரிக்கைகள் குறித்த விவாதமும் மக்களவையில் இன்று நடைபெறவுள்ளது.

மாநிலங்களவையில், 2026ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டு மசோதா மீதான விவாதம் நடைபெற உள்ளது.

2025-26 நிதியாண்டில் கூடுதல் செலவினங்களுக்கான தொகையை ஒதுக்குவதற்காக இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

மக்களவையில் இன்று 2026-27ஆம் ஆண்டிற்கான ரயில்வே மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெறவுள்ளது.

இது தவிர, 2026-27ஆம் ஆண்டிற்கான வேளாண் மானியக் கோரிக்கைகள் குறித்த விவாதமும் மக்களவையில் இன்று நடைபெறவுள்ளது.

மாநிலங்களவையில், 2026ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டு மசோதா மீதான விவாதம் நடைபெற உள்ளது.

2025-26 நிதியாண்டில் கூடுதல் செலவினங்களுக்கான தொகையை ஒதுக்குவதற்காக இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

தெலங்கானா சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று ஐதராபாத்தில் தொடங்குகிறது.

இந்த கூட்டத்தொடரை சுமுகமாக நடத்துவதற்கு பேரவையில் உள்ள அனைத்து கட்சிகளும் ஒத்துழைக்கவேண்டும் என்று சட்டப்பேரவைத் தலைவர் திரு. கட்டம் பிரசாத் குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஐதராபாத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூட்டத்தொடர் எத்தனை நாட்கள் நடைபெறும் என்பதை இன்று பேரவையின் அலுவல் ஆய்வுக்குழு கூடி முடிவெடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

சட்டப்பேரவைத் கூட்டத்தொடருடன் சட்ட மேலவை கூட்டத்தொடரும் இன்று தொடங்குகிறது.

<<<<>>>>

ஒடிசா மாநிலம் மயூர்பஞ்ச் மாவட்டத்தில் நேற்று வீசிய பலத்த சூறாவளி காற்றினால் இருவர் உயிரிழந்தனர். பலர் பலத்த காயமடைந்தனர்.

இருநூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. மாவட்டத்தில் உள்ள குறைந்தது பன்னிரண்டு கிராமங்களில் மரங்கள் மற்றும் மின் கம்பங்கள் வேரோடு சாய்ந்தன.

பலத்த காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

கரஞ்சியா வட்டாரத்திற்கு உட்பட்ட கியா மற்றும் கங்கடா கிராமங்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

ஒரு ஆட்டோரிக்ஷா மற்றும் ஒரு ஸ்கூட்டர் காற்றினால் தூக்கி வீசப்பட்டு அருகில் இருந்த நீர்நிலைக்குள் விழுந்ததாகவும், அந்த அளவுக்கு சூறாவளியின் தாக்கம் இருந்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

சூறாவளியால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

<<<<>>>>

உலகளவில் கச்சா எண்ணை விலையைக் குறைக்க உதவும் வகையில், அவசரகால இருப்பிலிருந்து பெருமளவிலான எண்ணெயை தனது உறுப்பு நாடுகள் வெளியிடும் என்று சர்வதேச எரிசக்தி முகமை தெரிவித்துள்ளது.

ஆசியா மற்றும் ஓசியானியா நாடுகள் உடனடியாக எண்ணெயை வெளியிடத் தொடங்கும் என்றும், ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாடுகளின் இருப்பு இந்த மாத இறுதியில் வெளியிடத் தொடங்கும் என்றும் அந்த முகமை ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த ஒருங்கிணைந்த நடவடிக்கை வரலாற்றிலேயே மிகப்பெரிய அவசரகால எண்ணெய் வெளியீடு என்றும், இது உலகளாவிய

விநியோகத்திற்கு வலுவான பாதுகாப்பை வழங்கும் என்றும் அது கூறியுள்ளது.

சுமார் 400 மில்லியன் பேரல் எண்ணெயை வெளியிடவுள்ளதாக சர்வதேச எரிசக்தி முகமை அறிவித்துள்ளது.

இது 2022-ஆம் ஆண்டு உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பிற்குப் பிறகு வெளியிடப்பட்ட 182 புள்ளி 7 மில்லியன் பேரலை விட இரண்டு மடங்கு அதிகமாகும்.

இந்நிலையில் ஈரானுடனான மோதல் அடுத்த சில வாரங்களுக்குள் முடிவுக்கு வரக்கூடும் என்று அமெரிக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. கிறிஸ் ரைட் தெரிவித்துள்ளார்.

அதன் பிறகு உலகளாவிய எண்ணெய் விநியோகம் இயல்பு நிலைக்கு திரும்பும் என்றும், எரிபொருள் விலைகள் குறையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எந்த காரணமும் இல்லை என்று ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. செய்யது அப்பாஸ் அரக்சி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஊடகத்திற்கு அவர் அளித்த பேட்டியில் திரு. அரக்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

ஈரானுடன் ஒப்பந்தம் செய்வதற்கு அமெரிக்கா இன்னும் தயாராக இல்லை என்றும், அதற்கான நிபந்தனைகள் போதுமானதாக இல்லை என்றும் அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் கூறிய நிலையில், இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தனது நேர்காணலை சமூக ஊடகத்தில் பகிர்ந்துள்ள ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர், ஈரான் போர்நிறுத்தத்தையோ அல்லது பேச்சுவார்த்தையையோ நாடவில்லை என்றும், அத்தகைய கூற்றுகள் தவறானவை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அமெரிக்க அதிபர் இரு நாட்டு மக்கள் மீதும் திணிக்கும் இந்த சட்டவிரோதப் போர் தவறு என்பதையும், அது ஒருபோதும் மீண்டும் நிகழக்கூடாது என்பதையும் உணரும் வரை ஈரானின் சக்திவாய்ந்த ஆயுதப்படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தும் என்றும் அவர் கூறினார்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படையினரால் ஈரானில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கும் சொத்துக்களை இழந்தவர்களுக்கும்

இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்றும் திரு அப்பாஸ் அரக்சி வலியுறுத்தினார்.

<<<<>>>>

ஈரானியப் படைகள் அண்டை நாடுகள் மீது ஆயிரக்கணக்கான ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை ஏவியுள்ளதாகவும், அவை பொதுமக்கள் தங்கும் விடுதிகள், விமான நிலையங்கள், குடியிருப்புகள் மற்றும் பொருளாதார உள்கட்டமைப்புகளை கண்மூடித்தனமாக குறிவைப்பதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

வளைகுடா நாடுகள் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா ஒருவழித் தாக்குதல் ட்ரோன்களைப் பயன்படுத்துவதாகவும், அந்தப் பழியை ஈரான் மீது சுமத்துவதாகவும் ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. செய்யது அப்பாஸ் அரக்சியின் குற்றச்சாட்டுகளையும் அமெரிக்கா நிராகரித்துள்ளது.

<<<<>>>>

இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் ஈரான் இடையேயான போர் காரணமாக மேற்கு ஆசியாவில் அதிகரித்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில், ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனங்கள் இன்று வளைகுடா நாடுகளுக்கு 48 விமானங்களை இயக்கவுள்ளன.

இதில் சென்னை உள்பட நாட்டின் பல்வேறு நகரங்கள் மற்றும் ஜெட்டாவிற்கு இடையே 10 விமானங்களும், மஸ்கட்டிற்கு இந்திய நகரங்களுக்கு இடையேயும் 12 விமானங்களும் இயக்கப்படவுள்ளன.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் மும்பை அணிக்கு எதிரான ஆட்டத்தில் காசி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

முன்னதாக நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஜம்ஷெட்பூர் அணியை வென்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் பஞ்சாப் அணி - கோவா அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

----------------

19 வயதுக்குட்பட்டோருக்கான ஸ்பேனிஷ் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் ஆடவர் இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்திய இணை பட்டம் வென்றது.

**<<<<The End>>>>**